**செ.வெ.எண்: 69** **நாள்: 26.02.2017**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 1377 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் மற்றும் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர்.செந்தில்நாதன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 25.02.2017 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்திலுள்ள திருவரங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 189 மாணவ, மாணவியர்களுக்கும், ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 278 மாணவர்களுக்கும், அரசுப்பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 338 மாணவிகளுக்கும், அரிமளம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 301 மாணவர்களுக்கும், திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 164 மாணவர்களுக்கும், அரசுப்பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 107 மாணவிகளுக்கும் என மொத்தம் 1377 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி, பாடப்புத்தகம், சீருடை, காலணி, நோட், புத்தகங்கள், அட்லஸ் வரைபடம் உள்ளிட்ட 14 வகையான கல்வி உபகரணங்களை வழங்கி வருகிறது. மேலும் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அம்மா குடிநீர், அம்மா உணவகம், அம்மா உப்பு, டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித்திட்டம், பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறை உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும். மேலும் இத்தகைய விலையில்லா கல்வி உபகரணங்களை பெறும் மாணவ, மாணவியர்கள் இதனை உரிய முறையில் பயன்படுத்தி நன்கு கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் துணைத் தலைவர் திரு.இரா.ராஜசேகரன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.துரை.தனசேகரன், வீட்டு வசதி சங்கத்தலைவர் திரு.ராஜேந்திரன், முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர்கள் திரு.திலகர், திரு.ராமு, முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் திரு.சந்திரன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திரு.ஞானகலைச்செல்வன், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.மணமோகன், முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் திரு.சேட், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**